# கூத்தராற்றுப்படையில் இசைக்கருவிகள்

**முனைவர்.பா.ரதிதேவி**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்

---

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்**
**சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்" – த.இ.வ.பக்கம் 55**

என்னும் நூற்பா ஆற்றுப்படை நூல்களுக்குரிய விதியைப் பகர்கிறது. மலைகளில் எழும் பல்வேறு ஓசைகளைத் திறம்பட எடுத்துரைக்கும் நூலாக கூத்தராற்றுப்படை விளங்குகிறது. கூத்தராற்றுப்படையில் இசைக்கும் இசைக்கருவிகள், அக்கருவியை இசைத்தலின் பயன்கள் குறித்துக் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கூத்தராற்றுப்படை

ஆற்றுப்படை நூல்களுள் ஒன்று மலைபடுகடாம். இந்நூல் இரணிய முட்டத்துப் பெருங்கௌசிகனார் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப்பாடியதாகும்.

**மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்ததனால் இப்பாட்டு மலைபடுகடாம் என்று பெயர்பெற்றது.**

## கூத்தராற்றுப்படையில் இசைக்கருவிகள்

சங்க காலத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்களான கூத்தர்களிடம் பல்வேறு இசைக்கருவிகள் இருநததமையைப் பின்வரும் கூத்தராற்றுப்படைச் செய்திகள் மூலம் அறியலாம்

- வானிருண்டு மழையை வழங்கும் முகில் முழங்கினாற் போலப் பண்களின் ஓசையையுடைய மத்தளம்
- ஆகுளி என்னும் சிறுபறை
- நன்றாக உருக்கித் தகடாகத் தட்டின் வெண்கலத்தாலான கஞ்சத்தாளம். இது பாண்டில் என்றும் அழைக்கப்படுகிறது
- மயிற்பீலியால் அழகு செய்யப்பட்ட ஊதுகொம்பு
- கணுக்களின் இடையே துளையுண்டாக்கப் பெற்ற யானையின் துதிக்கை போன்ற நெடுவங்கியம்

- நரம்பின் ஓசையுடைய கரடிகை
- தாளத்துடன் இசைந்தொலிக்கும் வலிய வாயினையுடைய சல்லி

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, சிறுபறை,தூம்பு, விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை என்றும் தோலாற் செய்யப்பட்ட கருவிகளும், யாழ் முதலிய நரம்புக் கருவிகளும், கஞ்சதாளம் முதலிய சஞ்சக்கருவிகளும் முட்டைகளாகக் கட்டிய பைகளைக் கூத்தர் காவடியில் சுமந்து சென்றனர். இதனை

**"திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்**

---------------------------------

-----------------

**கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி" – (கூத்தராற்றுப்படை 1-10)**

என்ற வரிகள் எடுத்துக்கூறுகின்றன.

யாழ் என்பது பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்யாழ் என்னும் நான்கு வகைப்படும். இவை நான்கும் பெரும்பான்மை, சிறுபான்மையாக வருவன பிறவுமுள

**"பேரியாழ் பின்னும் மகரஞ் சகோடமுடன்**
**சீர்பொலியுஞ் செய்கோடு செப்பினார் - தார் பொலிந்து**
**மன்னுந் திருமார்ப வண்வுகூடற் கோமானே**
**பின்னும் உளவே பிற" (பத்துப்பாட்டு -26)**

என்றும், இந்நால்வகை யாழிற்கும் நரம்பு கொள்ளுங்கால் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும், சகோடயாழிற்கு பதினாலும், செங்கோட்டயாழிற்கு ஏழும் கூறப்படும். இதனை

**"ஒன்றும் இருபதும் ஒன்பதும் பத்துடனே**
**நின்ற பதினான்கும் பின்னேழும் - குன்றாத**
**நால்வகை யாழிற்கும் நன்னரம்பு சொன்முறையே**
**மேல்வகை நூலோர் விதி" (பத்துப்பாட்டு பக் 26-27)**

என்னும் அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து உணர முடிகின்றது.

## பேரியாழின் இயல்பு

கூத்தர் பல்வேறு வகையான இசைக்கருவிகளோடு பேரியாழ் எனும் இசைக்கருவியையும் வைத்துள்ளனர். இது ஓசைச்செவியால் ஓர்ந்து முறுக்கின நரம்பின் கண் குற்றம் தீர நுண்ணிய துளைகளை இருத்தி, பத்தலைப் பசையால் கூட்டி சுள்ளாணிகளை இறுகத் தைத்து, யாப்பை அமையப்பண்ணி, புதிய பொன்னிறத்

தோலையுடையதாய் நறுமணம் கமழும் கூந்தலையுடைய மடந்தையின் மயிரொழுங்கக் கிடந்த அழகிய வயிற்றைப் பொய்ய பொல்லம் பொத்துதல் நடுவே சேரப்பட்டு இனிதாய் தனக்குரிய பிளவுடையதாய், உயர்ந்து வளைந்த கோட்டையும் உடைய பேரியாழ் என்று கூத்தராற்றுப்படையில் பேரியாழின் இயல்பினைப் பற்றி எடுதுரைக்கின்றது.

**“நொடித் திரிவு அன்ன தொண்டு படு திவவின்**

--------------------

-----------------------------------------

**வணர்ந்துத்து மருப்பின் வள்உயிர்ப் பேரியாழ்” (கூத்தராற்றுப்படை 21-37)**

என்ற பாடல் சுட்டுகின்றது.

## இசைக்கருவி - இசைத்தலின் அவசியம்

நன்னன் மலைக்குன்றுகள் அடாந்த காடுகளால் சூழப்பட்டிருக்கும் பெரிய நிழல் தரும் மரங்கள் நிறைந்த குறுங்காட்டில் வலிய வில்லை உடையவராய், விலங்குகளைத் தேடித்திரியும் குறவர்களும் மயங்குகின்ற குன்றத்தில் சென்றால், அங்கிருந்து செல்லாமல் எல்லோரும் ஒருங்கு கூடிக் கல்லென்னும் ஓசையுண்டாகுமாறு உம்முடைய இசைக்கருவிகளை இயக்குங்கள் என்று எடுத்துரைப்பதை

**“மாநிழற் பட்ட மரம் பயில் இறும்பின்**

-----------------------------------

------------------------------------

**இயங்கல் ஓம்பி நம் இயங்கள் தொடுமின்” (கூத்தராற்றுப்படை 271 -277)**

என்ற வரிகள் எடுத்துரைக்கப்படுகிறது. இசைக்கருவிகளை இசைப்பதன் வாயிலாக தமக்கு நேரும் இடையூறுகளிலிருந்து தப்பிக்கலாம்.

பகைவரோடு போர் செய்து உயிர்விட்ட வீரமிக்க வீரர்களுடைய அழியாத புகழையுடைய பெயர்களைப் பொறித்து நடப்பட்ட கல் நடுகல் (நடுகற்கள்) எனப்படும். புறமுதுகிட்டோரை இகழ்ந்து நிற்கும் விழிகளும் உள்ளன. ஆம்மறக்கல்லை காண்புழி அக்கல்லிடத்தே நிற்கும் மறத்தெய்வம் மனம் மகிழும்படி இன்பம் மிக்க உங்கள் பாட்டால் ஏத்தி நும்யாழையும் வாசித்து வணக்கம் செய்யுங்கள். வீரக்கற்களை வழிபடும் வழக்கத்தை

**“இன்புறு முரற்கை நும்பாட்டு விருப்புஆக**

**தொன்று ஒழுகு மரபினரும் மருப்பு இகுத்துத் தனைமின்”**

**(கூத்தராற்றுப்படை 390 -391)**

என்னும் பாடல்வழி அறியமுடிகின்றது.

## இசைக்கருவிகளைப் பாதுகாத்தல்

நன்னனின் நவிரமலையில் உள்ள திருக்கோயிலில் வீற்றிருக்கும் தொழுதற்குரிய கடவுளை கண்டால், அக்கடவுளைத்தொழுது செல்லுங்கள். அம்மலையில் இசைக்கருவிகளை இசைக்க வேண்டாம். ஏனெனில் அம்மலையில் இடைவிடாது மழைபெய்த வண்ணமிருக்கும். அதனால் நும்முடைய இசைக்கருவிகள் பழுதுபடும் என்று பரிசுபெற்ற கூத்தன் பரிசுபெற நாடும் கூத்தனை வழிநடத்துகிறான்.

**“---------------- வறிது.**

**நும்இயம் தொடுதல் ஓம்புமின் மயங்கு துளி**

**மாரி தலையும் அவள் மல்லல் வெற்பே” (கூத்தராற்றுப்படை 231-233)**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றது.

மேலும் கரிய பெரிய மலையில் முகிற்கூட்டங்கள் உங்கள் மேல் தூவவேண்டும் என்று கருதி நீர்த்துளிகளைத் தூவும். அத்தருணத்தில் தோற்கருவிகள் நனையாதபடி அங்குள்ள குகைகளில் புகுந்து அவ்விசைக் கருவிகளைக் காத்துக்கொள்ளுங்கள்

**“காஅய்க் கொண்ட நும்இயமதொய் படாமல்**

**கூவல் அன்ன விடரகம் புகுமின்” (கூத்தராற்றுப்படை 365-366)**

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது.

## நிறைவுரை

கூத்தராற்றுப்படை வாயிலாக இசைக்கருவிகள் அதிகமாகச் சங்ககாலத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. இன்று பல இசைக்கருவிகள் புதுவடிவம் தாங்கியும், சில வழக்கிழந்தும் காணப்படுகின்றது. எப்படியிருப்பினும் அக்காலத்தில் இசைக்கலை வல்லுநர்களால் இசைக்கலை் உயிர்ப்புடன் இருந்தமையை மேற்கண்ட தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.